SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
குரோதி வருடம் ஐப்பசி 18
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
ஹிஜிரி 1446 ரபிஉல் ஆகிர் 31

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

● புதுச்சேரி ● திங்கள்கிழமை, நவம்பர் 4, 2024 ● வெளியூர்: 5-11-2024, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 117 ● 6 பக்கம் ● ரூ.6

## ரூ.2.85 கோடி மதிப்பீட்டில்

# கொளத்தூர் தொகுதியில் 'முதல்வர் படைப்பகம்'

## மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சென்னை, நவ. 4-**

சென்னை கொளத்தூர் தொகுதியில் 'முதல்வர் படைப்பகத்தை' முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சென்னை கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (சி.எம்.டி.ஏ.) சார்பில் முதல்அமைச்சரின் சட்டசபை உறுப்பினர் மேம்பாட்டு நிதியை கொண்டு "முதல்வர் படைப்பகம்" என்ற பெயரில் கோவொர்க்கிங் ஸ்பேஸ் அமைக்கப்பட்டுள்ளது. இது ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த படைப்பகத்தில் வருகின்றவர்களுக்கு படிப்பதற்கென்று ஒரு தளமும், பணியாற்றுவதற்கு என்று ஒரு தளமும், உணவு அருந்துவதற்கு ஒரு தளமும் என 3 தளங்கள் உள்ளன. ஒரே நேரத்தில் 51 பேர் படிக்கும் அளவுக்கு இடவசதி உள்ளது. அவர்களுக்குத் தேவையான புத்தகங்களை கொண்ட ஒரு நூலகமும் அமைக்கப்பட உள்ளது.

இதற்கு ரூ.5 மற்றும் ரூ.10 கட்டணமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இலவசமாக அனுமதிக்கப்பட்டால் பொழுதுபோக்கு கூடமாக மாறிவிடக்கூடும் என்பதற்காக இந்த குறைந்தபட்ச கட்டணம் பெறப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணி செய்வதற்காக கோ ஓர்க்கிங் ஸ்டேஷன் எனப்படும் ஒரு தளம் அமைக்கப் பட்டுள்ளது. இதில் 38 நபர்கள் ஒரே நேரத்தில் பணியாற்றலாம். மேலும், இதில் 3 கலந்தாய்வு கூடங்கள் அமைக்கப்படுகின்றன. கலந்தாய்வு கூடங்களில் இரண்டில் தலா 4 பேரும், ஒன்றில் 6 பேரும் அமர்ந்து பணியாற்ற முடியும்.

கோ ஓர்க்கிங் ஸ்பேஸ் பெரிய பெரிய நிறுவனங் களுக்கு வழங்கப்படாது என்றும், பொருளாதாரத்தில் சாதாரண நிலையில் இருக்கும் நிறுவனங்களுக்கு இந்த பணியிடத்தை பகிரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கும் குறைந்த அளவு கட்டணம் நிர்ணயிக்கப்பட உள்ளது. மேலும், பெண்கள் கணினி கற்பதற்காக, அனிதா பெயரில் கொளத்தூரில் தொடங்கப்பட்ட மையத்தில், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பலனடைந்துள்ளனர். இதன், 13 வது பேட்ச்சாக பயிற்சி முடித்தவர்களுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கணினி வழங்குகிறார்.

## ஜார்க்கண்ட் முதல்மந்திரியை வேட்பாளராக முன்மொழிந்தவர் பா.ஜ.க.வில் இணைந்தார்



**ராஞ்சி, நவ. 4-**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக (நவம்பர் 13 மற்றும் நவம்பர் 20) சட்டசபை தேர்தல் நடத்தப்படுகிறது. 23ம் தேதி வாக்குகள் எண்ணப்படுகின்றன.

கடந்த தேர்தலில் பர்ஹைத் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற முதல் மந்திரி ஹேமந்த் சோரன், இந்த முறையும் அதே தொகுதியில் போட்டியிடுகிறார். அவரது வேட்பு மனுவில் அவரது பெயரை முன்மொழிந்தவர்களில் ஒருவர் மண்டல் முர்மு. சுதந்திர போராட்ட தியாகியும், சந்தால் புரட்சிக்கு தலைமை தாங்கியவருமான சிடோகனுவின் குடும்பத்தைச் சேர்ந்த முர்மு, நேற்று திடீரென பா.ஜ.க.வில் இணைந்தார். தியோகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய மந்திரி சிவராஜ் சிங் சவுகான், அசாம் முதல்மந்திரி ஹிமந்தா பிஸ்வா சர்மா ஆகியோர் முன்னிலையில் கட்சியில் இணைந்தார்.

ஹேமந்த் சோரனை தேர்தலில் போட்டியிட முன்மொழிந்த மண்டல் முர்மு, பா.ஜ.க. குடும்ப உறுப்பினர் ஆகியிருப்பதாக ஹிமந்தா பிஸ்வா சர்மா எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். தற்போதைய ஜார்க்கண்ட் அரசின் தவறான கொள்கைகளால் பழங்குடியின சமூகத்தின் கலாச்சாரம் ஆபத்தில் உள்ளதாகவும், அதனால் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் பா.ஜ.க.வில் இணைகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பர்ஹைத் தொகுதியில் ஹேமந்த் சோரனை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் காம்லியேல் ஹெம்ப்ரான் போட்டியிடுகிறார்.

## பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்து: 23 பேர் பலி

**டேராடூன், நவ. 4-**

உத்தரகாண்ட் மாநிலம் கர்வால் மாவட்டத்தில் இருந்து குமான் மாவட்டத்திற்கு இன்று காலை பஸ் சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் 40 பேர் பயணித்தனர்.

அல்மொரா மாவட்டம் மர்சுலா கிராமத்தில் மலைப்பாங்கான பகுதியில் சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், தீயணைப்புத் துறையினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அ.தி.மு.க.வை விஜய் விமர்சிக்காதது ஏன்?-எடப்பாடி பழனிசாமி பதில்



**சேலம், நவ. 4-**

சேலம் மாவட்டம் எடப்பாடியில் நடந்த அ.தி.மு.க செயல்வீரர்கள் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

தமிழக வெற்றிக்கழக மாநாட்டில் பேசிய அதன் கட்சி தலைவர் விஜய், அ.தி.மு.க.வை விமர்சிக்காததற்கு காரணம், 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் ஆட்சியில் இருந்த அ.தி.மு.க. மக்களுக்கு பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதுதான். எனவேதான் விஜய், அ.தி.மு.க.வை விமர்சிக்கவில்லை. அதற்காக மற்றவர்கள் ஆதங்கப்படுவது ஏன்? ஒவ்வொரு கட்சிக்கும் தனிப்பட்ட குறிக்கோள் இருக்கும். அதனை முன்னிறுத்தியே கட்சி தலைவர்கள் பேசுவார்கள். இதில் மற்றவர்கள் ஆதங்கப்படக்கூடாது.

கடந்த காலங்களில் அ.தி.மு.க.வில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் தலைமை பொறுப்பில் இருந்த போது கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோன்றுதான் தற்போதும் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதுதொடர்பாக பொதுக்குழு உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர். அவர்களுக்கு இனிவரும் காலத்தில் அ.தி.மு.க.வில் இடம் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## அசாமில் ரூ.7 கோடி மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல்



**கவுகாத்தி, நவ. 4-**

அசாம் மாநிலம் கச்சார் மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்று கச்சார் மாவட்டத்தின் லைலாபூரில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்குரிய வகையில் சென்ற வாகனம் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர்.

இந்த சோதனையில் 30 சோப்பு பெட்டிகளில் இருந்து 375 கிராம் ஹெராயின் மற்றும் 20,000 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ.7 கோடி என கூறப்படுகிறது. அந்த வாகனத்தின் டிரைவரை போலீசார் கைது செய்தனர். போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அசாமில் ரூ.7 கோடி மதிப்பிலான போதைப்பொருளை கடத்த முயன்ற நபரை கைது செய்த போலீசாருக்கு அம்மாநில முதல் மந்திரி ஹிமந்தா பிஸ்வா சர்மா தனது எக்ஸ் தளத்தில் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

# இலவச அரிசி, சர்க்கரை வழங்கிய எம்எல்ஏ



தீபாவளி பண்டிகைக்கான இலவச சர்க்கரை மற்றும் இலவச அரிசியினை மீனாட்சிபேட்டையில் அமைந்துள்ள நியாய விலை கடையில் கதிர்காமம் சட்டமன்ற உறுப்பினர் கேஎஸ்பி ரமேஷ் பொதுமக்களுக்கு வழங்கினார்.

# ஜிப்மரில் 4 ஊழியர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா



புதுச்சேரி, நவ. 4-

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை யில் 4 ஊழியர்களின் பணி நிறைவு பாராட்டு விழாவில் ஜிப்மர் இயக்கு னர் கலந்துகொண்டு வாழ்த்தினார்.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை யில் சமீபத்தில் பணி நிறைவு பெற்ற ஜாக்குலின் இமானுவேல் ராஜ், அன்பழகன், சத்தியமூர்த்தி, பெருமாள் ஆகியோரை ஜிப்மர் இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் கௌதம் ராய், ஜிப்மர் டீன் தாபா, ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜ் ஆகி யோர் கலந்து கொண்டு ஊழியர்களின் சேவைகளை வெகுவாக பாராட்டினர்.

செவிலிய கண்காணிப்பாளர் ஜாக்குலின் இமானுவேல் ராஜ் (34 வருடம் 3 மாதம்), பண்டக கண்காணிப்பாளர் அன்பழகன் (39 வருடம் 8 மாதம்), பல்நோக்கு உதவி யாளர் சத்தியமூர்த்தி (31 வருடம் 9 மாதம்), செவிலியர் உதவியாளர் பெருமாள் (40 வருடம் 3 மாதம்), ஜிப்மர் மருத்துவமனையில் சேவை புரிந்துள்ளதை சக அதிகாரிகளிடமும், ஊழியர்களிடமும், உறவினர்களிடமும் பாராட்டி நினைவு கூர்ந்தனர்.

பணி நிறைவு பெற்ற ஊழியர்கள் 4 பேருக்கும் ஜிப்மர் நிர்வாகம் சார்பில் அவர்களுக்கு சேர வேண்டிய காசோலை வழங்கப்பட்டு, பாராட்டு கேடயம் மற்றும் நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மூத்த கணக்கு அதிகாரி ஹவாசிங், கணக்கு அதிகாரி சீனிவாசன், உதவி கணக்கு அதிகாரி சிவபாலன், ஜிப்மர் தலைமை உணவு முறையாளர் மாதவி, மூத்த உணவு முறையாளர் பூங்குழலி, ஊழியர்கள் தினகரன் மற்றும் பணி நிறைவு பெற்ற ஊழியர்களின் உறவினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

4.11.2024 (திங்கள்கிழமை)

# தீபாவளியால் பொருளாதார வளர்ச்சி

மக்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரத்திலும் ஒளி வீச வைத்த நன்னாள் தீபாவளி. தீபாவளியையொட்டி அரசு பணிகளிலும் சரி, தனியார் நிறுவனங்களிலும் சரி, எல்லோரும் போனஸ் வாங்கியிருந்ததாலும், விவசாயிகளும் நல்ல விளைச்சலைக் கண்டிருந்ததாலும், எல்லோருடைய கைகளிலும் பணப்புழக்கம் அதிகமாக இருந்தது. அதை வைத்து தங்களுக்கு தேவையான எல்லா பொருட்களையும் அவரவர்களின் நிதி நிலைக்கேற்ப மக்கள் வாங்கியதால் வர்த்தகம் தழைத்தது.


தீபாவளி பண்டிகை கடந்த மாதம் (அக்டோபர்) இறுதியில் வந்தாலும், வர்த்தகம் பெருகி, மத்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசாங்கத்துக்குமான சரக்கு சேவை வரி, அதாவது ஜி.எஸ்.டி வசூல் பெரும் சாதனை படைத்துள்ளது. அக்டோபர் மாதத்தில் மட்டும் ஜி.எஸ்.டி வசூல் ரூ.1.87 லட்சம் கோடியாகும். இது ஜி.எஸ்.டி. அமல்படுத்த தொடங்கிய 2017ம் ஆண்டு ஜூலை மாதம் 1ந் தேதியில் இருந்து வசூலிக்கப்பட்ட மாதாந்திர தொகையில் இரண்டாவது பெரிய வசூலாகும். இதுவரை ஜி.எஸ்.டி. கண்ட அதிக வசூலும் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில்தான். அந்த மாதத்தில் ரூ.2.10 லட்சம் கோடி வசூலாகி இருக்கிறது. இதில் தமிழ்நாட்டில் இருந்தும் கணிசமான தொகை கிடைத்துள்ளது.

தீபாவளி சமயத்தில் நாடு முழுவதும் இந்த பொருள், அந்த பொருள் என்று இல்லாமல், எல்லா பொருட்களின் விற்பனையும் அதிகமாக இருந்துள்ளது. மோட்டார் வாகனங்களில் கார், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற பயணிகள் வாகனங்களின் விற்பனை 20 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அதாவது, இந்த கால கட்டத்தில் மட்டும் 4 லட்சத்து 90 ஆயிரம் வாகனங்கள் விற்பனையாகியுள்ளன. மின்சார வாகனங்களை பொருத்த மட்டில் 2.18 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு, 56 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது. இப்போது இருசக்கர மின்சார வாகன விற்பனையும் அக்டோபர் மாதத்தில் ஒரு உயர்வைக் கண்டுள்ளது. இந்த மாதத்தில் மட்டும் 1.39 லட்சம் மின்சார வாகனங்கள் விற்பனையாகியுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 11 ஆயிரத்து 784 இருசக்கர மின்சார வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

டிராக்டர் விற்பனையும் அதிகமாக இருப்பதைப்பார்த்தால் விவசாயமும் வளர்ந்து இருக்கிறது, விவசாயிகளும் வருமானத்தை பார்த்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதுபோல, பெட்ரோல், டீசல் விற்பனையும் அதிகரித்து இருக்கிறது. தங்க நகைகள் விற்பனை, வெள்ளி பொருட்கள் விற்பனை, ஜவுளி விற்பனை, வீட்டு உபயோக பொருட்கள் விற்பனை, நிலம், வீடு விற்பனை என்று எல்லாவற்றிலும் உயர்வு இருப்பதால்தான் அது ஜி.எஸ்.டி. வசூலில் பிரதிபலித்துள்ளது. பெரும்பாலான பொருட்கள் யு.பி.ஐ. பணப்பரிமாற்றத்தின் மூலமே வாங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அக்டோபர் மாதத்தில் மட்டும் ரூ.23.5 லட்சம் கோடிக்கு பணப்பரிமாற்றம் நடந்துள்ளதைப் பார்த்தால், மக்கள் இணையவழி பணப் பரிமாற்றத்துக்கு முக்கியத்துவம் அளித்து வருவது தெள்ளத்தெளிவாகிறது. மொத்தத்தில் தீபாவளி பண்டிகை மக்கள் வாழ்வில் மட்டுமல்ல, நாட்டின் பொருளாதார வளர்ச்சிலும் ஒரு ஒளியை பாய்ச்சியுள்ளது.

# Virat Kohli's indecisive footwork a concern ahead of Australia tour': Ian Chappell





New Delhi, Nov. 4-

India batter Virat Kohli had a forgettable series as New Zealand completed a historic 3-0 whitewash against the hosts in Mumbai on Sunday.

Chasing a 147-run target, India suffered a sharp top-order wobble with Kohli undone by a sharp, ripping delivery from left-arm spinner Ajaz Patel. Kohli only totalled five runs in the match, ending the series with 93 runs at a 15.50 average – his lowest across any home series in his career where he has played at least six innings.

Kohli was subject to a trial by the left-arm spinners with Mitchell Santner dismissing him twice in the second Test in Pune, followed by Patel's strike in Mumbai. Kohli, who turns 36 on Tuesday, has been in a rough patch with his last Test hundred coming back in July 2023 in the West Indies.Former Australia captain Ian Chappell highlighted Kohli's indecisive footwork as the major concern before the upcooming Border Gavaskar Trophy in Australia.

Chappell exemplified Kohli's weakness by referring to his dismissal to a low full-toss from Santner in the first innings in Pune. "Star batter Virat Kohli's first-inning dismissal was the perfect example of India's lack of decisive footwork," Chappell wrote in his column on ESPNcricinfo. "Kohli was clean bowled by a delivery from Santner that, if the batter had taken even a small pace out of his crease, he could have hit on the full. However, instead of Kohli's lack of decisive footwork being the culprit, his shot selection was questioned." The batting frailties have crippled India at the worst-possible time, said Chappell. "Calamitous displays against New Zealand exposed weaknesses in India's batting. There's no good time for batting fragility, but on the eve of a tough tour of Australia, it's asking for trouble," Chappell added.India's five-match tour Down Under will begin on November 22 in Perth.

# புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா

ஈரோடு, நவ. 4-

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கவுண்டிச்சிபாளையம், புங்கம்பாடி, வடமுகம் வெள்ளோடு மற்றும் குமாரவலசு ஊராட்சிப் பகுதிகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் முத்துசாமி ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் 2 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.144.68 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி, வள்ளிபுரத்தான்பாளையத்தில் ஒன்றிய பொதுநிதியிலிருந்து ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நிழற்குடையினையும், ராசாம்பாளையம் பகுதிநேர நியாய விலைக்கடையை முழுநேர நியாய விலை கடையாக மாற்றியும், புதுவலசு பகுதியில் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதிநேர புதிய நியாய விலைக்கடையினையும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தொடர்ந்து, அதேப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8.47 லட்சம் மதிப்பீட்டில் வி.பி.ஏ. நகர் மெயின் சாலையை பலப்படுத்துதல் பணியினையும், ரூ.9.86 லட்சம் மதிப்பீட்டில் கரட்டுப்பாளையம் முதல் அண்ணமார் கோவில் சாலை வ ரைசாலையை பலப்படுத்துதல் பணியினையும், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி, லட்சுமணன் வீடுமுதல் சென்னிமலை பிரதான சாலை



வரை ரூ.7.71 லட்சம் மதிப்பீட்டில் புதிய வடிகால் அமைக்கும் பணியினையும், ரூ.8.11 லட்சம் மதிப்பீட்டில் பொட்டுசாமி விநாயகர் கோவில் வீதியில் புதிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினையும், 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.9.20 லட்சம் மதிப்பீட்டில் சி.எஸ்.ஐ. காலனியில் புதியகழிப்பிடம் அமைக்கும் பணியினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.5.48 லட்சம் மதிப்பீட்டில் தாசநாயக்கன்பாளையம் பிரகாஷ் மளிகை கடைமுதல் ஏற்கனவே உள்ள வடிகால் வரை வடிகால் அமைக்கும் பணியினையும், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி (ராசாம்பாளையம்) ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் மெயின்சாலை முதல் தங்கராஜ் வீடு வரையும், ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் துரைசாமி வீடு முதல் பொன்னுசாமி வீடு வரையும், ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் கருப்பனசாமி வீடு முதல் துரைசாமி வீடு வரையும், ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் மாரப்பன் வீடுமுதல் சாந்தாமணி வீடு வரையும்,ரூ.5லட்சம்மதிப்பீட்டில் கேவிந்தசாமி வீடு முதல் நாச்சிமுத்து வீடு வரையும் தலா 80 மீ நீளத்திற்கு புதிய கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளையும், புங்கம்பாடி ஊராட்சி நத்தக்காட்டுப்பாளையத்தில் ரூ.4.20 லட்சம் மதிப்பீட்டில் விநாயகர் கோவில் முதல் லோகநாதன் வீடு வரை வடிகால் அமைக்கும் பணியினையும், ரூ.4.49 லட்சம் மதிப்பீட்டில் பழனிச்சாமி மளிகை கடை முதல் சக்திவேல் வீடு வரையும், ரூ.5.62 லட்சம் மதிப்பீட்டில் தேவாளிப்பாறை பிரதான சாலை முதல் திருப்பதி வீடு வரையும் புதிய கான்கிரீட் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கும், வடமுகம் வெள்ளோடு ஊராட்சியில் ரூ.6.85 லட்சம் மதிப்பீட்டில் வளர்மதி வீடு முதல் விஜய் நர்சரி பள்ளி வரை சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் சிந்து வீடு முதல் விஜய் நர்சரி பள்ளி வரை வடிகால் அமைக்கும் பணியினையும், குமாரவலசு ஊராட்சியில் ரூ.12.94 லட்சம் மதிப்பீட்டில் சிறுவன்காட்டுவலசு கருக்கண்ணமார் கோவில் வி.எஸ்.கதிரேசன் வீடு முதல் ஏற்கனவே உள்ள வடிகால் வரை வடிகால் அமைக்கும் பணியினையும், ரூ.4.89 லட்சம் மதிப்பீட்டில் வெள்ளோடு அவல்பூந்துறை மெயின் சாலை முதல் குமாரவலசு பள்ளி வரை சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், ரூ.6.24 லட்சம் மதிப்பீட்டில் ராக்சாம்பாளையம் மெயின் சாலைமுதல் தேவராஜ் வீடுவரை வடிகாலுடன் கூடிய சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், ரூ.8.06 லட்சம் மதிப்பீட்டில் ராக்சாம்பாளையம் ஜோதிடர் விஸ்வநாதன வீடு முதல் மாகாளியம்மன் கோவில் முன்புறம் மேட்டுக் கடை சாலைவரை மேம்பாடு செய்யும் பணியினையும், ரூ.5.06 லட்சம் மதிப்பீட்டில் அண்ணமார் நகர் இரண்டாவது வீதியில் வடிகால் அமைக்கும் பணியினையும் எனமொத்தம் ரூ.144.68 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சதீஸ், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாஸ்கர் பாபு, பாலு, பெருந்துறை வட்டாட்சியர் செந்தில்குமார் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள்கலந்துகொண்டனர்.

# பேரிளம் பெண்களுக்கான கருத்தரங்கம்



**சேலம், நவ. 4–**

சேலம் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், பேரிளம் பெண்களுக்கான கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சரால் கடந்த 2022ஆம் ஆண்டு "கைம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்" அமைக்கப்பட்டது. இவ்வாரியம் கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை களைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வசதிகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சிறப்பு சுய உதவிக்குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை வகுத்து, சமூகத்தில் பாதுகாப்புடன் கண்ணியமான முறையில் வாழவைப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர் மற்றும் மணமாகாத மகளிர் ஆகியோரின் நலனுக்காக கருத்தரங்குகள் வாயிலாக நிதியினை முறையாக கையாளுதல் குறித்த கல்வியறிவு ஏற்படுத்தப்படுகிறது. மேலும் சொத்துரிமை, குடும்ப வன்முறையிலிருந்து உரிய பாதுகாப்பு மற்றும் இதர இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பதற்கு இலவச சட்ட உதவி, புதிய நலத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் ஏனைய உதவிகள் ஆகியவை கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்கள் ஆகியோருக்கு கிடைப்பதை இவ்வாரியம் உறுதி செய்கிறது. மேலும் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி இன்றையதினம் சமூகநலத்துறை வாயிலாக வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது. கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், பேரிளம் பெண்களுக்குத் தேவைப்படும் சொத்துரிமை, குடும்ப வன்முறையிலிந்து உரிய பாதுகாப்பு, இலவச சட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வுகள் கருத்தாளர்களைக் கொண்டு இக்கருத்தரங்கின் வாயிலாக எடுத்துரைக் கப்பட்டுள்ளது.

மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட சட்ட ஆணையம் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய துறைகளும் இக்கருத்தரங்கில் பெறப்படும் கருத்துக்கள் மற்றும் அரசின் திட்டங்கள் அனைத்தையும் அனைத்து கிராமங்கள் மற்றும் மாநகராட்சியின் அனைத்து வார்டுகளுக்கும் கொண்டு சேர்க்கும் பணியை மேற்கொண்டு அவர்களது முன்னேற்றத்திற்கு பயனுடையதாக மாற்ற வேண்டும். அப்போதுதான் இக்கருத்தரங்கு வெற்றிபெற்றதாக கருத முடியும். அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வினை அனைவருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில், மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் சுகந்தி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஸ்ரீமுரளி, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்றோர் நல வாரிய அலுவல் சாரா உறுப்பினர் டாக்டர் ரேணுகா, முதன்மைக் கல்வி அலுவலர் (ஓய்வு) சுமதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அருணாச்சலேஸ்வரர் கோயில் தேர் மராமத்து பணியை ஆட்சியர் ஆய்வு



**திருவண்ணாமலை, நவ. 4–**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர்.பாஸ்கர பாண்டியன் அருணாச்சலேஸ்வரர் கோயில் தேர் மராமத்து பணி நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: அருணாச்சலேஸ்வரர் கோயில் திருத்தேர் மராமத்துப் பணிகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுமார் 59 அடி உயரம், சுமார் 200 டன் எடை அளவு கொண்டிருக்கிறது. 470 சிற்பங்கள் இத்தேரில் இடம் பெற்றிருக்கின்றது. 203 சிற்பங்கள் தற்பொழுது புதுப்பிக்கப் பட்டிருக்கின்றது. கார்த்திகை தீபத்திருவிழாவில் தேரோட்டம் நிகழ்வு நடைபெற ஏதுவாக சுவாமி தேரில் மராமத்து பணிகள் ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

தேரில் உள்ள சிற்பங்கள் ஈட்டி மரத்தினால் செய்யப்பட்டுள்ளது. நிலைகள் வேங்கை மரத்தினால் செய்யப்பட்டிருக்கின்றது. தேவா சனம், நராசனம். சிம்மாசனம். அலங்கார தூண்களில் உள்ள பழுதடைந்தவைகள் மாற்றப் பட்டுள்ளது. மேலும், தேவாசனம், சிம்மாசனம் மற்றும் இறையாசனம் இவற்றில் வரும் பழுதடைந்த பலகைகள் மாற்றப்பட்டுள்ளது. நான்கு கொடுங்கை நிலைகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தேரில் கண்டத்தில் வரும் பழுதடைந்த குத்துக்கால்கள் நீக்கப்பட்டு புதியதாக குத்தக்கால்கள் மற்றும் ரீப்பர்கள் மாற்றப்பட்டுள்ளது. தேரில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மா மற்றும் துவாரபாலகர் ஆகியவை புதுப்பிக்கப்பட்டுள்ளது. சுவாமி தேரில் இல்லாத இடங்களில் சிம்மயாழி 37, கொடியாழி 13, தேர் சிற்ப்பங்கள் 153 என மொத்தம் 203 தேர் சிற்பங்கள்மாற்றப்பட்டு, பஞ் சவர்ணம் பூச்சு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுவாமி திருத்தேர் வெள்ளோட் டம் எதிர்வரும் 08.11.2024ந் தேதியன்று நடைபெறவுள்ளது. டிசம்பர் 10 ஆம் தேதி அன்று திருத்தேர் விழா விமர்சியாக நடைபெற உள்ளது. அது மட்டும் இன்றி இத்தேரில் இதுவரை இல்லாத அளவில் அனைத்து சிற்பங்களும் தெளிவாக தெரியும் வகையில் பொலிவான வண்ணங் கள் மற்றும் வார்னிஷ்கள் பூசப் பட்டு வருகிறது. கோயில் திருத்தேர் பணி பல ஆண்டுகளுக்கு பிறகு புதுப்பிக்கப்பட்டு வருவதால், புதுப்பிக்கும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.மேற்படி நிகழ்விற்கான தேர் உறுதித்தன்மை சான்று பொதுப் பணித் துறையிட மும் மற்றும் சாலையின் உறுதித் தன்மை குறித்தான சான்று நெடுஞ் சாலைத் துறையிடம் கோரப் பட்டுள்ளது. எனவே, அருணாச்ச லேஸ்வரர் கோயில் தேரானது அனைத்து நிலைகளிலும் புதுப்பிக்க ப்பட்டு புதிய தேராக பொலிவுடன் தேரோட்டம் நடை பெறும் என தெரிவித்துள்ளார்கள்.இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், அருணாச்சலேஸ் வரர் கோயில் இணை ஆணையர் ஜோதி. அறங்காவலர் குழு தலைவர் ஜீவானந்தம் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவெண்ணெய்நல்லூர் அருகே தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நிதியுதவி



**திருவெண்ணெய்நல்லூர், நவ. 4–**

திருவெண்ணெய்நல்லூர் அருகே உளுந்தூர்பேட்டை தொகுதி கொத்தனூர் கிராமத்தை சேர்ந்த அண்ணாமலை மகன் மணி(60), வீரப்பன் மகன் விநாயகம் ஆகியோரது அடுத்தடுத்த கூரை வீடுகள் மின் கசிவு காரணமாக தீப்பிடித்து எரிந்து சாம்பலானது. தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு திருவெண்ணெய் நல்லூர் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான சந்திரசேகரன் நிவாரண உதவிகளை வழங்கினார். அப்போது ஊராட்சி மன்ற தலைவர் அஸ்வினி சிவராஜ், ஒன்றிய பொருளாளர் மைக்கேல், சரவணம்பாக்கம் முன்னாள் கிளை கழக செயலாளர் முருகன், டி.கொளத்தூர் ஒன்றிய குழு உறுப்பினர் சரோஜா குப்புசாமி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பிரேம், பெரியசெவலை ஊராட்சி மன்ற தலைவர் வீரப்பன், மாவட்ட தொழிலாளர் அணி துணை தலைவர் சக்கரவர்த்தி, கிராமம் சசிக்குமார், கண்ணாரம்பட்டு துணை தலைவர் மனோகரன், டி.கொளத்தூர் துணை தலைவர் சரவணன் ஜானகி உள்ளிட்ட திமுக கிழக்கு ஒன்றிய, கிளைக் கழக மற்றும் சார்பு அணி நிர்வாகி கள் பலர் கலந்துகொண்டனர்.

# 'Pakistan can beat India in Tests on spinning tracks', says Wasim Akram after New Zealand's whitewash win





**New Delhi, Nov. 4-**

Reacting to India's landmark home series whitewash defeat to New Zealand, bowling legend Wasim Akram on Monday remarked that Pakistan will have the advantage if they were to play Tests against their neighbours on spinning pitches.

India and Pakistan had contrasting Octobers with Rohit Sharma's side suffering a stunning home series defeat, exaggerated by their glaring weakness against the New Zealand spinners. 37 of the 57 wickets taken by the New Zealand bowlers were by their spinners, led by Ajaz Patel, Mitchell Santner and part-timer Glenn Phillips. India's top players, including captain Rohit Sharma and Virat Kohli, endured their worst series averages at home as the Black Caps stood tall on turning strips in Pune and Mumbai.

Akram was in conversation with former England batter Michael Vaughan during their commentary stint in the first ODI between Australia and Pakistan in Melbourne on Monday.

"I would want to see a Test series between India and Pakistan," remarked Vaughan to which Akram replied: "It will be massive. It will be good for the game, for two cricket crazy nations."

While Vaughan affirmed that "Pakistan can now beat India on the turners", Akram added that: "Pakistan have a chance to beat India in Tests now on a spinning track. They have been hammered by New Zealand 3-0 at home."

Meanwhile, Pakistan made a resounding come-from-behind win in their three-match home Test series against England on the back of their spinners Noman Ali and Sajid Khan. After being drubbed by England in the first Test on a flat-track in Multan, Pakistan made a horde of changes that included resting senior pacers Naseem Shah and Shaheen Afridi for a refined spin attack.

The two spinners then took 39 of the 40 wickets that fell in the successive games in Multan and Rawalpindi as Pakistan secured their first home series win since 2021.

The teams have not met in a Test match since Pakistan's tour to India in 2008 when the hosts won a three-match series 1-0. India won the opening Test in Delhi before securing draws in Kolkata and Pune. India and Pakistan have also met in any interation of the World Test Championship since 2019.

Overall in 59 Test meetings, Pakistan have won 12 games to India's nine with 38 matches ending in draws between the sides.

# மொரப்பூர்-தருமபுரி ரயில்வே திட்ட பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டும்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்



**தருமபுரி, நவ. 4–**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஒன்றிய 3 வது மாநாடு மொரப்பூர் ராமாக்கவுண்டர் திரு மண மண்டபத்தில் சீத்தாராம் யெச்சூரி நினைவரங்கத்தில் நடைபெற்றது. ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பி.வி.மாது, இந்திராகாந்தி ஆகியோர் தலைமை வகித்தனர். ஜோதி மாநாட்டு கொடி ஏற்றி வைத்தார். ஆனஸ்ட்ராஜ் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். ஒன்றியக்குழு உறுப்பினர் என். ராமகிருஷ்ணன் வரவேற்றார். மாநிலக்குழு உறுப்பினர் ஆர். சிசுபாலன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். ஒன்றிய செயலாளர் கே. தங்கராசு வேலை அறிக்கையினை வைத்தார். ஒன்றியக்குழு உறுப்பினர் எம். ராமன் வரவு –செலவு கணக்கை சமர்பித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.மல்லிகா, தி.வ. தனுசன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். சி.தாமரை செல்வன், கே.கர்னல், ஆர்.லதா, ஆர்.ஞானசேகரன் அகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாவட்ட செயலாளர் ஏ.குமார் நிறைவுறையாற்றினார்.

மாநாட்டில் 9 பேர் கொண்ட ஒன்றியக்குழுவிற்கு ஒன்றிய செயலாளராக கே.தங்கராசு மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து கீழ் கண்ட தீர்மானங்க ள் நிறைவேற்றப் பட்டன.

கே.ஈச்சம்பாடி அணைநீரை மொரப்பூர் பகுதி ஏரிகளில் நிரப்ப வேண்டும். செனாக்கல் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மொரப்பூரில் மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும். மொரப்பூர் –தருமபுரி ரயில்வே திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். மருதிப்படி மோட்டூர் கிராமத்திற்கு மயானவசதி செய்து தரவேண்டும். பொம்மட்டி கிராமத்திற்கு நூலகம் அமைக்க வேண்டும். விவசாய பயிர்களை காக்க வனத்தையெட்டி மின்வேலி அமைக்க வேண்டும்.

கம்பைநல்லூரில் சார்பதி வாளர் அலுவலகம் அமைக்க வேண்டும். சாமண்ட அள்ளி ஊராட்சி பெரியார்நகர் மயானத் திற்கு சுற்று சுவர் அமைக்க வேண்டும். குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க வேண்டும். உள்ளிட்ட தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாதேஷ் நன்றி கூறினார்.

# அமைச்சரின் பாதுகாவலர் காரை மறித்து தாக்குதல்: 2 பேர் அதிரடி கைது



புதுக்கோட்டை, நவ. 4–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம் பெரியாளூர் விலக்கு சாலையில் திருமண மண்டபம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த திருமண மண்டபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு விஐபி எஸ்கார்ட் வாகனத்தில் புதுக்கோட்டை ஆயுதப்படை, மூன்றாம் படைப்பிரிவு, 2ஆம் நிலை காவலர் சசிதரன் உள்ளிட்ட போலீசார் பாதுகாப்பு பணிக்கு வந்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சி முடிந்து விஐபி எஸ்கார்ட்டு வாகனம் அறந்தாங்கி சாலையில் திரும்பும்போது எதிரே பெரியாளூர் கிராமத்திற்கு செல்லும் சாலையில் ஒரு கார் இன்டிக்கேட்டர் போடாமல் வேகமாக திரும்பியதால் விபத்து ஏற்பட இருந்தது. இதனையடுத்து போலீசார், அந்த வாகனத்தில் இருந்தவர்களிடம் இன்டிக்கேட்டர் போட்டு திரும்பி இருக்கலாமே என்று கேள்வி கேட்டதாகக் கூறப்படுகிறது. இதில் ஆத்திரமடைந்த பெரியாளூர் கிராமத்தைச் சேர்ந்த ராம்குமார்(42), நாவுக்கரசு(40) ஆகிய இருவரும் போலீஸ் வாகன ஓட்டுநரை தாக்க முயன்றுள்ளனர். அப்போது வாகனத்தில் இருந்த போலீஸ்காரர் சசிதரன், இதனை தட்டி கேட்டுள்ளார். அப்போது காவலர் சசிதரனையும், இரும்பு கம்பியை எடுத்து தாக்க முயன்று சீருடையை கிழிக்க முயன்றுள்ளனர்

இதை தடுக்க வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் முருகையா, காவலர் பிரசாந்த் ஆகியோரையும் தகாத வார்த்தைகளால் திட்டி தாக்க முயன்றுள்ளனர். மேலும், போலீஸ் வாகனத்தை செல்லவிடாமல் தடுத்து, அந்த கடை வீதியில் நின்ற குளமங்கலம் தெற்கு ராஜேந்திரன்(55) என்பவரையும் தாக்கியுள்ளனர். இதில் காயமடைந்த ராஜேந்திரன் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். போலீசாரை தாக்க முயன்று,

பணி செய்யவிடாமல் தடுத்ததாக காவலர் சசிதரன் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்த அறந்தாங்கி போலீசார், ராம்குமார் மற்றும் நாவுக்கரசு ஆகிய இருவரையும் கைது செய்து காரையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் அறந்தாங்கி பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# பழங்குடியின மக்களுடன் தீபாவளி கொண்டாட்டம்



புதுச்சேரி, நவ. 4–

புதுச்சேரி விமான நிலையம் பின்புறம் வசிக்கும் பழங்குடியின மக்கள் இடத்திற்கு சென்று அங்கு உள்ள குழந்தைகள், மாணவர்கள், பெரியோர்களுடன் சேர்ந்து தீபாவளி இனிப்பு, காரம் மற்றும் பட்டாசு வழங்கி கொண்டாடப்பட்டது. இதற்கான நிகழ்ச்சியை பூரணாங்குப்பம் தனசுந்தரம் சாரி டேபிள் சொசைட்டி தன்னார்வலரும், புதுவை don'twast food நிறுவனர் ஸ்டீபன் ராயப்பா, துணைவியார் ஜான் ஸ்டீபன் குடும்பத்தார் இணைந்து பூரணாங்குப்பம் பனை ஆனந்தன் தலைமையில் செய்திருந்தார். நிகழ்விற்க்கு உதவியாக கணேசன், நிக்கோலஸ்.சந்திரமௌலி மற்றும் வித்தியாசாகர், அந்தோணி ராஜ், ஸ்ரீவநீ சொசைட்டி தன்னார்வலர்கள் சதீஷ், பாலச்சந்தர், வண்டிமுத்து, பேஷன் கோ், நரேந்திரன், சிவச்சந்திரன், நெல்லித்தோப்பு விஜய், வாணரப்பேட் பிரவீன் உட்பட பலர் பங்கு பெற்றனர். இதில் பழங்குடியின மாணவர்களுக்கு இனிப்பு, காரம், வழங்கி பட்டாசுகளுடன் தீபாவளி கொண்டாடப்பட்டது.

# புதுச்சேரியில் தீபாவளி அன்று காற்றின் மாசு 4 மடங்கு அதிகரிப்பு

## மாசு கட்டுப்பாட்டு குழுமம் தகவல்



புதுச்சேரி, நவ. 4–

புதுச்சேரியில் கடந்த தீபாவளியை விட 4 மடங்கு காற்று மாசு அதிகரித்து இருந்தது ஆய்வில் தெரிய வந்தது.

தீபாவளி பண்டிகையின் போது உருவாகும் காற்று மாசு மற்றும் ஒலி மாசுவை அளவீடு செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு வாரியம் தீபாவளி முந்தைய தினம் மற்றும் தீபாவளி தினத்தன்று 24 மணி நேரம் ஒலி மற்றும் காற்று மாசு அளவை கண்காணித்து வருகிறது.

அதன்படி, இந்தாண்டு தீபாவளியான கடந்த 31ம் தேதி, மூலக்குளம் மற்றும் முதலியார் பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் காற்று மாசு மற்றும் ஒலி மாசு கண்காணிக்கும் பணி நடந்தது. இதேபோல் காரைக்கால் கோவில்பத்து பகுதியிலும் கண்காணிக்கப்பட்டது.

புதுச்சேரியில் கடந்தாண்டு தீபாவளி பண்டிகை அன்று பதிவான அளவை விட இந்த ஆண்டு காற்றின் மாசு 20 சதவீதமும், ஒலி மாசு 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

புதுச்சேரியில் சாதாரண நாட்களில் காற்றில் கலந்துள்ள மிதவை மாசு துகள்கள் (பி.எம்.10, பி.எம்.2.5), கந்தக ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு ஆகியவை 65 மைக்ரான் அளவில் இருக்கும். ஆனால், தீபாவளி அன்று இந்த மதிப்பு 4 மடங்கு உயர்ந்து 240 மைக்ரான் அளவு பதிவாகியிருந்தது. அதுபோல் கந்தக ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு ஆகியவை 2 மடங்கு அதிகரித்தது.

ஒலி மாசு பொருத்தவரில் சாதாரண நாட்களில் 65 டெசிபல் அளவில் இருக்கும். தீபாவளி அன்று புதுச்சேரி காரைக்காலில் 75 முதல் 95 டெசிபல் வரை பதிவாகியுள்ளது. ஒட்டுமொத்தமாக காற்றின் தர குறியீடு மோசமான நிலையில் இருந்தது. இவ்வாறு மாசு கட்டுப்பாட்டு குழுமம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாஜக செல்வகணபதி எம்.பி.,யிடம் முதலமைச்சர் ரங்கசாமி நலம் விசாரிப்பு



புதுச்சேரி, நவ. 4–

பாஜக தலைவர் செல்வகணபதி எம்.பி.,யை முதலமைச்சர் ரங்கசாமி நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

புதுச்சேரி பாஜக தலைவரும், மாநிலங்களவை எம்.பி.,யுமான செல்வ கணபதிக்கு மூட்டுவலி பிரச்னை ஏற்பட்டு அவதிப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அங்கு அவருக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நடந்தது.

சிகிச்சைக்கு பிறகு மருத்துவமனையில் இருந்து செல்வகணபதி எம்.பி., வீடு திரும்பினார்.

இந்நிலையில், நேற்று விவேகானந்தா பள்ளி வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கு முதலமைச்சர் ரங்கசாமி சென்றார். அங்கு செல்வகணபதியை சந்தித்து நலம் விசாரித்தார். உடல் நலனை கவனித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் முதலமைச்சர் ரங்கசாமி கட்சிப் பணி மற்றும் மக்கள் பணியில் தொடர்ந்து சிறப்பாக செயல்பட செல்வகணபதி எம்.பி.,க்கு வாழ்த்து தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.பி.ரமேஷ் மற்றும் அக்ரி கணேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# 2 புதிய ஆம்புலன்ஸ் சேவை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் அர்ப்பணித்தார்





காரைக்கால், நவ. 4–

புதுச்சேரி அரசின் போக்குவரத்து துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வாகிப்படுகின்ற சாலை பாதுகாப்பு நிதியின் மூலம் ரூபாய்.26,65,336 செலவில் இரண்டு புதிய ஆம்புலன்ஸை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார்.

காரைக்கால் நேரு நகர் துணை இயக்குநர் நலவழித்துறை அலுவலகத்தில் புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் தலைமை தாங்கி கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் வாகனம் திரு.பட்டினத்தில் சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் முன்னிலையில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இவ்விழாவில், நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார், என்ஆர் காங்கிரஸ் பிரமுகர், கூட்டணிகட்சி பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு புகைப்பட போட்டி



ராமநாதபுரம், நவ. 4–

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மற்றும் பருவநிலை மாற்றம் துறை சார்பாகவும், ராமநாதபுரம் மாவட்ட தேசிய பசுமைப் படை இயக்கம் சார்பாகவும், ராமநாதபுரம் வருவாய் மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் தொடர்பான புகைப்பட போட்டி செய்யது அம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. புகைப்பட போட்டியில் ராமநாதபுரம் நகர் கலை அறிவியல் கல்லூரிகளில் இருந்து 70 மாணவர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு சையது அம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்கள். சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் புகைப்பட போட்டியின் நிகழ்விற்கு தலைமை விருந்தினராக தஸ்தகீர் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சோமசுந்தரம் கலந்துகொண்டார்கள்.

மேலும் இந்நிகழ்வில் இயற்பியல் துறைத்தலைவரும், மாணவர் பேரவை ஒருங்கிணைப்பாளருமான முனைவர் பிரபாவதி வரவேற்புரை ஆற்றினார்கள். புகைப்படப்போட்டிக்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் ராமநாதபுரம் மாவட்ட தேசிய பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் பெர்னாடிட் சிறப்பாக செய்திருந்தார். அனைத்து நிகழ்வுகளையும் தேசிய பசுமைப் படையின் பரமக்குடி கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தீனதயாளன் ஒருங்கிணைத்தார்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அன்றைய தினமே பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசாக இரண்டு பேருக்கும், இரண்டாவது பரிசாக இரண்டு பேருக்கும், மூன்றாம் பரிசாக இரண்டு பேருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான உறுதிமொழியை அனைவரும் ஏற்றனர். நிறைவாக செய்யது அம்மாள் கலை – அறிவியல் கல்லூரியின் மாணவர் நாகாதிதியன் நன்றியுரை ஆற்றினார்.

# மாடு வளர்ப்போர் மாடுகளை சாலைகளில் திரிய விட வேண்டாம்

## நாகதியாக ராஜன் எம்எல்ஏ வேண்டுகோள்



காரைக்கால், நவ. 4–

மாடு வளர்ப்போர் தயவு செய்து தங்கள் மாடுகளை சாலைகளில் திரிய விட வேண்டாம் என திரு.பட்டினம் தொகுதி எம்எல்ஏ நாகதியாக ராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காரைக்கால் திரு.பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் இதுகுறித்து நேற்று பத்திரிக்கையாளர்களிடம் கூறியதாவது, காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில வாரமாக அதிக அளவில் ஆடு, மாடு குதிரைகள் நடு சாலைகளில் திரிந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக காரைக்கால் நாகை தேசிய நெடுஞ் சாலை மற்றும் உள்புற சாலைகளில் ஏராளமான மாடுகள் பகலிலும், இரவிலும் திரிந்த வண்ணம் உள்ளது. இரு நாட்களுக்கு முன்பு காரைக்கால் நாகை தேசிய நெடுஞ் சாலையில் சுமார் 10 க்கு மேற்பட்ட இடங்களில் இந்த மாடுகளால் விபத்து ஏற்பட்டு, பலர் கை கால்களை இழந்துள்ளனர். ஒருவர் உயிரையே விட்டுள்ளார். விபரம் அறிந்து ஒவ்வொருவரது வீட்டுக்கும் செல்லும்பொழுது அவர்கள் குடும்பத்தினர் கதறியழும் காட்சி கண்ணீரை வரவழைக்கிறது. தயவுசெய்து மாடுகளை வளர்ப்போர் சற்று சிந்தித்து பார்க்க வேண்டுகிறேன். உங்கள் வீட்டில் இது பான்ற மாடுகளால் விபத்துக்கள் ஏற்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு காயம் ஏற்பட்டால் உங்கள் குடும்பத்தினர் எவ்வாறு அவதியுறுவார்களோ அதேபோல் தான் மற்றவர்களும் அவதி உற்று வருகின்றனர். எனவே தயவு செய்து மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் மாடுகளை சாலைகளில் திரிய விட வேண்டாம். குறிப்பாக இரவு நேரத்தில் கால்நடைகளை சாலையில் திரிய விட வேண்டாம். கால்நடைகளை உங்கள் இருப்பிடத்தில் வைத்து பராமரிக்க வேண்டுகிறேன். மீறும் பட்சத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் போக்குவரத்து போலீசார் மூலம் படும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவேன் என்றார்.

# புதிது புதிதாக கட்சி தொடங்குபவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை-ஸ்டாலின்




சென்னை, நவ.4–

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவரது சொந்த தொகுதியினான கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது மு.க. ஸ்டாலின் கூறியதாவது:

தமிழக இளைஞர்களை எல்லாம் நிலைகளில் இருந்தும் தகுதியுடைவர்களாக மாற்றுவதுதான் திராவிட மாடலின் லட்சியம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆனால் இன்னைக்கு இந்த ஆட்சி எதுவும் செய்யவில்லை என குறை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் அவர்கள் பார்க்கனும். யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, மூன்றரை ஆண்டுகளாக பல திட்டங்கள நிறைவேற்றி வருகிறோம். தேர்தலின் போது கூறிய உறுதி மொழிகளை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மீதமுள்ள ஒன்றிரண்டு உறுதி மொழிகளை வரும் காலத்தில் உறுதியாக நிறைவேற்றப் போகிறோம். இதில் எந்த மாற்றமும் கிடையாது. தொழிலில் தமிழ்நாடு முதல் இடத்தை பெற்றிருக்கிறது. தொலைநோக்கு அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது.

சென்னையில் இரண்டு நாட்கள் தொடர்ந்து பெய்த மழைக் காரணமாக தேங்கிய தண்ணீர் தி.மு.க. அரசு சிறப்பாக செயல்பட்டு அடுத்த நாள் தண்ணீர் இல்லாத அளவிற்கு மாற்றியது.

இதை சில மீடியாக்கள் கடந்த வருடம் தேங்கிய தண்ணீர் படத்தை போட்டு பார்த்தீர்களா, தண்ணீர் தேங்கியிருக்கு எனப்போட்டது. திமுக வளர்வது அவர்களுக்கு பிடிக்கவில்லை. அதான் காரணம். அதனால்தான் யார் யாரோ, வருகிறவர்கள் எல்லாம், புதுசா புதுசா கட்சி தொடங்கிறவர்கள் எல்லாம் தி.மு.க. அழிய வேண்டும் என்ற நிலையில்தான் போய் கொண்டு இருக்கிறார்களே தவிர...

விமர்சனம் செய்பவர்கள் இந்து மூன்றரை ஆண்டு சாதனைகளை எண்ணிப் பாருங்கள். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் வாழ்க வசவாளர்கள். அதை பற்றியும் நாங்கள் கவலைப் படபோவதில்லை. எங்களுடைய போக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதுதான்.

தேவையில்லாமல் எல்லோருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தேவையும் இல்லை. நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. மக்களுக்கு பணியாற்றவே நேரம் கிடைக்கவில்லை. எந்த நம்பிக்கையில் எங்களை நம்பி ஆட்சியை ஒப்படைத்தீர்களோ, அந்த நம்பிக்கையுடன் பணியாற்ற காத்திருக்கிறோம்.

இவ்வாறு மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

# கோரிக்கை மனுக்களை பெற்ற ஆட்சியர்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைகேட்பு நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

# மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை பெற்ற ஆட்சியர்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அருகில் தனித்துணை ஆட்சியர் கலியமூர்த்தி.

# விடுதலை சிறுத்தை கட்சியில் மாவட்ட செயலாளர்களை மாற்றம் செய்ய முடிவு



சென்னை, நவ.4–

விடுதலை சிறுத்தைகள் கட்சி 144 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. 2 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஒரு மாவட்ட செயலாளர் என்ற அடிப்படையில் கட்டமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

கட்சியில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளை அதிகளவில் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் புதிதாக மாவட்ட செயலாளர்களை நியமிக்க கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் முடிவு செய்துள்ளார்.

புதியவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் கட்சியை மறு சீரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளார்.

அதன்படி 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தொகுதி வாரியாக மாவட்ட செயலாளர்களை திருமாவளவன் நியமிக்க முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கட்சி தொண்டர்களுக்கு முகநூல் நேரலை வழியாக பேசி அறிவிப்பை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு முழுவதும் 234 மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகத்தை அறிவிக்க இருக்கிறோம்.

தற்போது இயங்கும் 144 மாவட்டச் செயலாளர்கள் அதிக புகார் உள்ளவர்கள், பணி செய்யாமல் செயலற்று இருப்பவர்கள் மற்றும் எல்லை பிரச்சனைகளை கருத்தில் கொண்டு ஒருசிலரை அப்பொறுப்பில் இருந்து விடுவிக்க வேண்டி இருக்கும்.

புதிதாக நியமிக்கப்பட இருக்கும் 234 மாவட்டச் செயலாளரும் அந்தத் தொகுதியின் பெயரில் மாவட்டச் செயலாளர்கள் என்று அழைக்கப் படுவார்கள்.

பொறுப்புக்கான பரிந்துரை குழு அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் அனுப்பப் படுவார்கள்.

புதிதாக விண்ணப்பம் அளிக்க விரும்புபவர்கள் இந்த பரிந்துரை குழுவிடம் நமது தமிழ்மண் சந்தா 2000 ரூபாய் மற்றும் பொறுப்புக்கு 1000 ரூபாய் டி.டி எடுத்து விண்ணப்பம் அளிக்க வேண்டும்.

ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகத்திற்கும் மற்றும் அணிகளின் மாநில மாவட்ட பொறுப்புகளுக்கும் இந்த பரிந்துரை குழுவிடம் விண்ணப்பம் அளிக்கலாம்.

புதிதாக நியமிக்கப் படும் மாவட்ட நிர்வாகம்:

மாவட்டச் செயலாளர் 1, மாவட்ட பொருளாளர்1, மாவட்டத் துணைச் செயலாளர்கள்5, மாவட்ட செய்தி தொடர்பாளர்1, செயற்குழு உறுப்பினர்1, மகளிர் அணி செயலாளர்1, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறையின் மாவட்ட அமைப்பாளர்1, மேற்கண்ட மாவட்ட நிர்வாகத்தில் குறைந்தது 9 பேரும் அதிகபட்சம் 11 பேரும் இடம் பெறுவார்கள்.

கட்சியில் பிரிக்கப்பட்ட ஒரு ஒன்றிய நிர்வாகத்திற்கு ஒரு மாவட்டத் துணைச் செயலாளர் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் ஐந்து முதல் அதற்கு மேற்பட்ட ஒன்றிய நிர்வாகம் நம் கட்சியில் பிரிக்கப்பட்டால், அந்த பிரிக்கப்பட்ட ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மாவட்டத் துணைச் செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

மாவட்ட நிர்வாகத்தில் உள்ள பொறுப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒன்றிய நிர்வாகத்திலும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

வருகிற 15ந் தேதிக்குள் அனைத்து நிலை பொறுப்புகளுக்கும் பரிந்துரை குழுவிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் வருவாய் மாவட்ட அடிப்பப்படையில் நியமிக்கப் படும் பரிந்துரை குழுக்கள் இன்றி, மேலும் ஐந்து மண்டல உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட இருக்கிறது.

வடமண்டலம், மேற்கு மண்டலம், மைய மண்டலம், டெல்டா மண்டலம், தென் மண்டலம் என்று 5 மண்டல உயர்நிலைக் குழு அமைக்கப்பட இருக்கிறது.

தற்போது உள்ள 144 மாவட்டச் செயலாளர்களில் ஒரு சிலர் ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் வருகிறார்கள். இவற்றைக் குறித்து அந்த பகுதிக்குள் வரும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உயர்நிலைக் குழுவுடன் பேசி ஒரு முடிவு எடுத்து அவை சரி செய்யப்பட்டு அறிவிக்கப்படும்.

எந்த முடிவு ஆனாலும் என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் ஏற்றுக்கொண்டு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த தகவலை தலைமை செய்தி தொடர்பாளர் கு.க.பாவலன் தெரிவித்துள்ளார்.

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) ராஜ்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் சீதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமா, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், மாவட்ட வழங்கல் அலுவலர் சுமதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தீபாவளி விடுமுறையை யொட்டி புதுச்சேரியில் ரூ.50 கோடிக்கு மது விற்பனை



புதுச்சேரி, நவ.4–

தீபாவளி, புத்தாண்டு, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் பொதுமக்கள் புத்தாடை அணிந்து, நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடுவது வழக்கமாகும்.

இதேபோல் மது பிரியர்கள் பண்டிகை காலங்கள் என்றாலே விதவிதமான மதுபானங்களை வாங்கி நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து மதுகுடித்து கொண்டாடுவார்கள்.

புதுச்சேரி என்றாலே மதுவுக்கு பெயர் பெற்றதாகும். பிரெஞ்சு கலாசாரம் இங்கு காணப்படுவதால் பலவிதமான வெளிநாட்டு மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதற்காக வெளிமாநிலங்களில் இருந்து ஏராளமான மது பிரியர்கள் தொடர் விடுமுறை நாட்களில் புதுவைக்கு வந்து நண்பர்களோடு மது குடித்து கும்மாளம் போடுவது வழக்கம்.

இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை புதுச்சேரி, காரைக்காலில் 5 நாட்கள் விடுமுறை விடப்பட்டது. அதாவது தீபாவளி பண்டிகைக்கு முந்தைய நாளான கடந்த 30ந் தேதி முதல் நேற்று 3ந் தேதி வரை விடுமுறை அளிக்கப் பட்டது. அதுபோல் தமிழகம், ஆந்திரா, கர்நாடகம், கேரளா மற்றும் மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங் களிலும் 4 நாட்கள் தொடர் விடுமுறை அளிக்கப் பட்டது.

இந்த விடுமுறையை கொண்டாட வெளி மாநிலத்தை சேர்ந்த இளைஞர்கள், இளம் பெண்கள் அதிகளவில் புதுவையில் குவிந்தனர். இதன்காரணமாக மது விற்பனையும் படுஜோராக நடந்தது.

புதுவை, காரைக்காலில், வழக்கமான நாட்களில் நாள் ஒன்றுக்கு ரூ.4லு கோடிக்கு மது விற்பனை நடைபெறும். வார இறுதி நாட்களில் இது சற்று உயரும்.

தற்போது தொடர் விடுமுறை என்பதால் கடந்த 5 நாட்களில் புதுவை மற்றும் காரைக்காலில் மது விற்பனை 3 மடங்குக்கு மேல் உயர்ந்தது. ரூ.50 கோடிக்கு மது விற்பனை நடந்துள்ளது.

# 100 சதவீதம் இடப்பங்கீடு நடைமுறைப்படுத்தும் நாளே உண்மையான சமூகநீதி நாள்: ராமதாஸ்



சென்னை, நவ. 4–

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை மாகாணத்தில் அனைத்து சமூகத்தினருக்கும் 100 சதவீதம் இடப்பங்கீடு வழங்குவதற்கான 1070 என்ற எண் கொண்ட சமூக அரசாணை 97 ஆண்டுகளுக்கு முன் சுப்பராயன் தலைமையிலான அரசில், கல்வித்துறை அமைச்சராக இருந்த முத்தையா முதலியாரால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட நாள் இன்று. தமிழ்நாட்டில் முழுமையான சமூகநீதி நிலைநிறுத்தப்பட்ட நாளில் அதற்கு காரணமானவர்களை போற்றுவோம், நன்றி கூறுவோம்.

104 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டு, 97 ஆண்டுகளுக்கு முன் இடப்பங்கீட்டை சாத்தியமாக்கிய இந்த சமூகநீதி மண்ணில் தான் இன்று சமூகநீதிக்கு சாவுமணி அடிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டு இன்றுடன் 950 நாட்கள் ஆகும் நிலையில், அதற்காக திமுக அரசு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை.

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இன்னும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படாத சமுதாயங்கள் ஏராளமான உள்ளன. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தி அவர்கள் அனைவருக்கும் மக்கள்தொகைக்கு இணையான இடப்பங்கீடு வழங்கி, தமிழ்நாட்டில் 100 சதவீதம் இடப்பங்கீடு நடைமுறைப்படுத்தப் படும் நாள் தான் உண்மையான சமூகநீதி நாள். அந்த இலக்கை அடைய பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக உழைக்கும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# தனியார் பள்ளியில் மாணவர்களுக்கு மீண்டும் உடல்நலம் பாதிப்பு: பெற்றோர்கள் வாக்குவாதம்



திருவொற்றியூர், நவ. 4-

சென்னை திருவொற்றியூர் கிராமத் தெருவில் விக்டரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை 1,200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளி கட்டிடத்தின் 3வது தளத்தில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை மாணவிகள் படித்து வருகிறார்கள். அதே தளத்தில் ஆய்வுக்கூடமும் உள்ளது.

இந்தநிலையில் கடந்த 25ம் தேதி ரசாயன வாயு கசிவு ஏற்பட்டது. இதனால் வகுப்பறையில் இருந்த மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம், மூச்சுத்திணறல், கண் எரிச்சல், தொண்டை எரிச்சல் ஏற்பட்டது. சில மாணவிகள் வாந்தி ஏற்பட்டு மயங்கி விழுந்தனர். இதனால் சக மாணவிகள், ஆசிரியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக பாதிக்கப்பட்ட 45 மாணவிகளை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அருகில் இருந்த அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்கிடையே ரசாயன வாயு கசிவு ஏற்பட்டதாக கூறப்படும் பள்ளியில் உள்ள ஆய்வுக்கூடத்தில் தாசில்தார் சகாயராணி, தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், திருவொற்றியூர் தீயணைப்பு துறையினர் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆனால் ஆய்வுக்கூடத்தில் ரசாயன வாயு கசிவு ஏற்பட்டுள்ளதை உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை. அது எப்படி ஏற்பட்டது? என்பது குறித்தும் விசாரித்து வந்தனர். வாயுக்கசிவால் மாணவர்கள் பாதிக்கப்பட்டதை அடுத்து அந்த பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 10 நாட்களுக்கு பின் இன்று பள்ளி மீண்டும் திறக்கப்பட்ட நிலையில் 3 மாணவிகளுக்கு வாந்தி ஏற்பட்டதால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. மயக்கமடைந்த 3 மாணவிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளி முன்பாக கூடி வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருவதால் பரபரப்பு நிலவுகிறது. தனியார் பள்ளியில் மீண்டும் வாயுக் கசிவு ஏற்பட்டதால் அந்த பள்ளிக்கு இன்று (நவ.04) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய கொடிமரம் மாற்ற எதிர்ப்பு: அறநிலையத்துறை அதிகாரிகளுடன், தீட்சிதர்கள் வாக்குவாதம்

சிதம்பரம், நவ. 4-

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உலக புகழ்பெற்ற நடராஜர் கோவில் உள்ளது. இக்கோவில் வளாகத்தில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் சன்னதி அமைந்துள்ளது. இங்கு நடராஜருக்கு மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம், ஆனி மாதம் ஆனி திருமஞ்சனம் தரிசன திருவிழாக்கள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தில்லை கோவிந்தராஜ பெருமாளுக்கு பிரமோற்சவம் நடத்த வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த சூழலில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவிலில் உள்ள கொடிமரம் பல ஆண்டுகளாக வெயில், மழையால் சேதமடைந்து இருப்பதால், அதற்கு பதிலாக புதிய கொடிமரம் வைக்க வேண்டும் என்று கோவில் நிர்வாக அறங்காவலர் சுதர்சன் மற்றும் பட்டாச்சாரியார்கள் முடிவு செய்தனர். இதற்காக நேற்று கொடி மரத்திற்கு படையல் செய்து வழிபட்டனர்.



இதுபற்றி அறிந்ததும் நடராஜர் கோவில் தீட்சிதர்கள் ஒன்று திரண்டு, தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவில் நிர்வாகிகளிடம் இக்கோவிலில் பிரமோற்சவம் நடத்துவது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது. இதனால் இங்குள்ள கொடி மரத்தை புதுப்பிக்கவோ, மாற்றவோ கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

இதுபற்றி அறிந்ததும் சிதம்பரம் துணை போலீஸ் சூப்பிரண்டு லாமேக் தலைமையில், சிதம்பரம் இன்ஸ்பெக்டர் ரமேஷ்பாபு மற்றும் போலீசார் அங்கு விரைந்து வந்து பட்டாச்சாரியர்கள் மற்றும் தீட்சிதர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து போக செய்தனர். இச்சம்பவத்தால் நடராஜர் கோவில் வளாகத்தில் 50க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் புதிய கொடிமரம் மாற்ற இன்று காலை வருகை தந்த அறநிலை யத்துறை அதிகாரிகளுடன், தீட்சிதர்கள் வாக்குவாதம் செய்தனர். அறநிலையத்துறை துணை ஆணையர் சுப்பிரமணியன் தலைமையிலான குழுவிடம், முந்தைய தீர்ப்புகளை சுட்டிக்காட்டி தீட்சிதர்கள் கேள்வி எழுப்பினர்.

கொடி மரத்தை தற்போது உள்ளதை போல் மாற்றுவதை எதிர்க்கவில்லை, புதிதாக வளையம் போன்றவை வைப்பதை எதிர்க்கிறோம் என்று தீட்சிதர்கள் தெரிவித்தனர்.

கொடிமரம் தற்போது உள்ள நிலையிலேயே திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என எழுத்து மூலமாக தீட்சிதர்களுக்கு ஒப்புதல் கடிதம் அளிக்க கோவிந்தராஜ பெருமாள் கோவில் அறங்காவலர்கள் முடிவு செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. கிளை செயலாளர் வெட்டிக்கொலை தொடர் கொலைகளால் மக்கள் அச்சம்



சிவகங்கை, நவ. 4-

சிவகங்கை அருகே நாட்டாகுடியைச் சேர்ந்தவர் கணேசன் (70). அ.தி.மு.க. கிளைச் செயலாளரான இவர், அப்பகுதியில் பெட்டிக்கடை நடத்தி வந்தார். இந்நிலையில் இன்று அதிகாலை கடையை திறக்கச் சென்ற அவரை, மர்மநபர் ஒருவர் வெட்டிவிட்டு தப்பினார். இதில் கணேசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் கொலை செய்த அதே நபர், முன்னதாக அதே கிராமத்தைச் சேர்ந்த பாலு என்பவரையும் வெட்டினார். ஆனால் அவர் தப்பியோடியதால் உயிர் தப்பினார்.

இதுகுறித்து சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தீபாவளி பண்டிகை முடிந்தநிலையில் அங்கு தொடர்ந்து 3 கொலைகள் நடந்துள்ள சம்பவம் அந்த பகுதியில் உள்ள சிவகங்கை, அதிமுக நிர்வாகி, கொலைமக்களை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.

# கிரிக்கெட் போட்டி பரிசளிப்பு விழா



கூனிச்சம்பட்டு Master Blaster Cricket Club நடத்திய மாநில அளவிலான 12ம் ஆண்டு கிரிக்கெட் போட்டியில் சுமார் 50 அணிகள் பங்கேற்று விளையாடியதில் ஏம்பலம் வாரியர்ஸ் அணி முதல் பரிசு பெற்றனர். இரண்டாம் பரிசு மாஸ்டர் பிலாஸ்டர் அணி வென்றனர். இந்த அணிக்கு உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ரொக்கப் பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

# சென்னை மெரினாவில் போலீசாரை ஆபாசமாக திட்டிய ஜோடிக்கு ஜாமீன் மறுப்பு: கோர்ட் உத்தரவு

சென்னை, நவ. 4-

சென்னை மெரினா லூப் சாலையில் நின்று கொண்டிருந்த காரை எடுக்குமாறு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் கூறியபோது, அந்த காரில் இருந்த ஜோடி, போலீசாரை ஆபாசமாக திட்டிய வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இது தொடர்பான புகாரின் அடிப்படையில் சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலெட்சுமி ஆகியோர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஜாமீன் கோரி சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலெட்சுமி ஆகியோர் சென்னை முதன்மை அமர்வு கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு கடந்த மாதம் 25ம் தேதி விசாரணைக்கு வந்த போது ஜாமீன் மனு தொடர்பாக காவல்துறை பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த மனு இன்று கோட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது இருவருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது என காவல்துறை கடும் எதிர்ப்பு தெரிவித்தது. காவல்துறையின் எதிர்ப்பை தொடர்ந்து, ஜாமீன் வழங்க சென்னை முதன்மை அமர்வு கோர்ட்டு மறுப்பு தெரிவித்து, ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலட்சுமி மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.


தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# ஒரே நேரத்தில் சென்னை நோக்கி படையெடுத்த மக்கள்: நிரம்பி வழியும் கிளாம்பாக்கம் பஸ் நிலையம்

சென்னை, நவ. 4-

தீபாவளி பண்டிகையை ஒட்டி, தொடர் விடுமுறையை சொந்த ஊர்களிலும், சுற்றுலா தலங்களிலும் கழிக்க சென்றவர்கள், வழக்கமான பணிகளுக்கு செல்லும் விதமாக சென்னைக்கு திரும்ப தொடங்கி உள்ளனர்.

இதனால், ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்களில் கூட்டம் அலைமோதியது. குறிப்பாக சொந்த ஊர்களில் இருந்து ஏராளமான மக்கள் சென்னை திரும்பும் பொருட்டு கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்கு வந்து இறங்கினர். இதனால், பஸ் நிலையம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. திருவான்மியூர், பிராட்வே உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்காக ஏராளமான பயணிகள் காத்திருக்கின்றனர். மாநகர பஸ்களில் முண்டியடித்துக் கொண்டு பயணிகள் ஏறிச் செல்கின்றனர். இதனால் கிளாம்பாக்கத்தில் இருந்து மாநகருக்கு செல்லும் மாநகர பேருந்துகளும் நிரம்பி வழிகிறது.



விடுமுறை முடிந்து தென்மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் சென்னை நோக்கி படையெடுத்ததால், செங்கல்பட்டு பரனூர் சுங்கச் சாவடியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. சென்னையின் நுழைவு வாயில் என்று அழைக்கப்படும் தாம்பரம், பெருங்களத்தூர் வரை இந்த பாதிப்பு நீடித்தது. பெரும்பாலானவர்கள் கார், பைக் உள்ளிட்ட சொந்த வாகனங்களில் சென்னை திரும்பியதால், தாம்பரம் ஜி.எஸ்.டி சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் பலரும் மின்சார ரெயிலில் பயணிக்க முற்பட்டுள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# கொளத்தூர் தொகுதியில் முதல்வர் படைப்பகம் திறப்பு

# புதுவையில் தீபாவளி மது விற்பனை ரூ.50 கோடி

# அதிமுகவை விஜய் விமர்சிக்காதது ஏன்?–எடப்பாடி பழனிசாமி பதில்




# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 4-11-2024 திங்கள்கிழமை •வெளியூர்: 5-11-2024 செவ்வாய்க்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்